உ

சிவமயம்.

காஞ்சிபுரம் வித்வான்

சபாபதிமுதலியாரவர்களியற்றிய

# அருணாசல சதகம்.


சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1913.

விலை அணா 1.

உ

சிவமயம்.

# அருணாசல சதகம்.

## காப்பு.

நேரிசைவெண்பா.

திருநாதன் றேடரிய சேவடியான் றன்மேல்
அருணா சலசதக மன்பாத் - தெருணாவால்
சொல்லுதற்கு மும்மதத்த தும்பிமுகத் தான்பதும
மெல்லடியே நற்றுணையா மே.

---

## நூல்.

கலிவிருத்தம்.

பொன்பரவுகொள் றையினோடுவான் புனலாறுவெண்
மதிசூடுநீ, என்பாரமு மினிதாவணிந் திதென்மையா லெளி
யேன்சொலும், புன்பாடலிங் கிதுதன்னையும் போற்றிக்கொள்
வா யெனவுள்ளெழும், அன்பாலுரைத் தேன்கொண்டருள்
அருணாசலா அருணாசலா. (க)

கடியார்துள வத்* தொங்கலான் கமலப்புது மலர்மேவினன்
படியூடிடந் தடிதேடவும் பறந்தன்னமாய் முடிதேடவும்
கொடியேன்மன மேகோயிலாக் குடிமேவினை யெனிலையநின்
அடியாரெலா மென்சொல்லிடார் அருணாசலா அருணாசலா. (உ)

---

* தொங்கல் - மாலை.

கற்பம்மனு கற்பம்முப் கற்பம்மெனு முறையால்வரு
பொற்பின்மிகு திருநீறணி புனிதர்க்கலா னின்றுளனு
நற்பங்கய நறுமாமலர் நணுகும்மரு டானெய்துமோ
* அற்பின்னடி யார்போற்றிடும் அருணாசலா அருணாசலா.(ந)

வில்லார்மலர்க் கணையேவிய வேளைப்பொடி யாச்செய்தனை
கல்லாலெறிந் தவன்முத்தியே காணப்பரிந் தனையாதலாற்
பொல்லாமனத் தவனென்றெனைப் புறமேவிடுத் திடலைபனே
அல்லார்†களத் தெம்மண்ணலே அருணாசலா அருணாசலா.(ச)

முடிபட்டபென் றனக்கேமலர் முகிழ்போற்குழைந் திடக்கண்டிடும், வடிபட்டநோக் குடையாள்புவி வானேடளித் திடுவாண்மனம்,பொடிபட்டநின் திருமேனியிற் பொரு ‡ பூழியன் கையிற்பிரம், படிபட்டபோ தென்பட்டதோ அருணாசலா அருணாசலா. (ரு)

வானாகினை வளியாகினை மால்வேதனோ டமரர்க்கெலாங்
கோனாகினை யடியார்மனங் குடிகொண்டவ ருணவூறிடுந்
தேனாகினை யமுதாகினை தேரூர்ந்திடர் செறிபோரினில்
ஆனாகிமால் வாவூர்ந்திடும் அருணாசலா அருணாசலா. (சு)

புல்லாகியே பூடாகியே புழுவாகியே மரமாகியே
கல்லாகியே னுங்கின்னகர்க் கண்மேவிலே னினியெங்ஙனே [ம்
பொல்லாப்பிறப் பொழிந்துய்குவேன் புலைகாயினே னிமயந்தரு
அல்லார்குழற் கொருபாகனே அருணாசலா அருணாசலா. (எ)

---

* அற்பு-அன்பு. † களம்-கண்டம். ‡ பூழியன்-பாண்டியன்.

படைக்குந்தொழி லயற்கீந்தனை பரிக்குந்தொழி லரிக்கீந் தனை, துடைக்குந்தொழி லாற்கீந்தனை துதிக்குந்தொழி லடி யார்க்கெலாங், கிடைக்கும்படிக் கினிதீந்தனை கிளரும்வகை தனையன்றுநீ, அடைக்குந்தொழி லாளானதென் அருணாசலா அருணாசலா. (அ)

பரிந்திட்டற மெண்ணான்குமுன் பயில்வாளிருக் கவுநின் னருள், சுரந்திட்டவன் றொண்டர்க்கெனச் சோறன்றுநீ கச் சூரினில், இரந்திட்டதென் னோசொல்லுவா * யெகினத்தவன் றலையொன்றினை, அரிந்திட்டதிற் பலிதேர்ந்திடும் அருணாசலா அருணாசலா. (கூ)

மையார்விழி மலைமாதொடு மருவுந்திருக் கோலத்தையோர்
கையார்புனன் மலரானிதங் காணப்பரி யாதென்னையோ
மெய்யானது வேறாகவே வேதாவரி யுழல்வுற்றனர்
ஐயாவவர் மதியென்கொலோ அருணாசலா அருணாசலா. (க0)

வாதாசன னாண்வின்மலை மாலார்கணை மறையேபரி
போதாசன னேசாரதி புவியேரத மாக்கொண்டுபின்
நாதாபுர நகைத்திட்டது நவிலும்மவ ரகமங்கவோ
ஆதாரமா றினுமேலுறும் அருணாசலா அருணாசலா. (கக)

முன்னாளிதழ் நறுமாலையு முரிதோலுமே புனையத்தரும்
பொன்னா†ரித ழியினோடும்வெம் புலியானைமற் றிவைதம்மொடு
மன்னாப்பயி ரறவெண்ணியோ வளர்மாமலை யுருவாயினை
அன்னாயெனு மன்பர்க்கருள் அருணாசலா அருணாசலா. (க௨)

* எகினம் - அன்னம். † இதழி - கொன்றை.

மேனளொரு விழியுன்பத மேல்சாத்திய மாயோன்பெரு
மீனனநா ளினுமாங்கவன் விழிகொண்டது ருசியென்றுதீங்
கானார்கரும் பதைவேரொடு களைகின்றது போலானதால்
ஆறுபனர் தொழுமையனே அருணாசலா அருணாசலா. (௧௩)

பாரின்கணே பைந்தாகினை பகர்நீரிடை நான்காகினை
சேருந்தழற் கண்மூன்றெனச் செறிந்தாய்வளிக் கிரண்டாகினை
நேரும்விணி லொன்றாகினை நிமிரும்முயிர்க் குயிராகினை
ஆருன்னிலை யறிவார்சொலாய் அருணாசலா அருணாசலா. (௧௪)

மாறுவரந் தருவோமென வைகுந்தனும் மலர்தேவனு
நூறாயிர முறைவந்தெதிர் நுவல்கிற்கினு நின்னன்பர்கள்
பேறுபதை நினைவார்கொலோ பிறவிக்கட லதுநீந்தவே
ஆறுறுநீத் தவர்வாழ்த்துறும் அருணாசலா அருணாசலா. (௧௫)

ஊனந்தரு மிவ்வாழ்வினி லுலையேற்றுமா மையினண்ணியே
ஈனந்தொடர் துயர்மேவினே னென்செய்குவே னெளியேனரு
மோனந்தருநிலையீதென மொழிவாயெனி லினியுய்குவேன் [ண்
ஆனந்தமே யுருவாகிய அருணாசலா அருணாசலா. (௧௬)

இடியுங்கரை மரமாமென வெண்ணுமலிவ் வுடறன்னையோர்
பிடியுங்குறை யாதுண்டுநான் பெரிதேவளர்த் துனதன்பினில்
படியுங்குண மிலனாயினும் பரிவாருனை யலதியாவரே
அடியும்முடி யுங்காணொணா அருணாசலா அருணாசலா. (௧௭)

* மட்டார்மலர் கொடுநின்னடி மலர்பூசனை செய்கின்றி
லார், மொட்டார்தனத் தார்தம்மையே முயங்கித்திகைப் பா

---

* மட்டு - தேன்.

னையையோ, கெட்டாரவர் தமக்குன்னருள் கிடையாதுமுப்
புரநீறெழ, அட் * டாரணன் றொழுநின்றருள் அருணாசலா அரு
ணாசலா. (௧௮)

பாம்பின்விட வாயிற்குளே படுதேரைபோ லெளியேனுளந்
தேம்பிப்புல னிற்சிக்குறுத் திகைப்புற்றுநல் லுணர்வின்றியே
சாம்பிக்கிடக் கின்றேனரு டருவாயெனி லினியுய்குவேன்
ஆம்பற்சிறு வாய்ப்பங்கனே அருணாசலா அருணாசலா. (௧௯)

வீட்டுக்கொரு வித்தாகிய மெய்ஞ்ஞானநன் னெறிதேர்கிலார்
பாட்டுக்கருள் செய்வாயெனும் பண்பேனுநன் குணர்கிற்கிலார்
கேட்டுக்கிட மாய்நாடொறுங் கிறிசெய்குவா ருய்வார்களோ
ஆட்டுக்குவல் லவனாகிய அருணாசலா அருணாசலா. (௨0)

செம்பிற்களிம் பதுநீங்கவே செம்பொன்னெனத் திகழ்
தன்மைபோல், பம்புற்றமும் மலநீங்கவே பரமாவநீ யென
வோதினை, வம்புற்றநா யேனேர்ந்திலேன் மயிலைக்குளுங்
கயிலைக்குளும், அம்பர்க்குளு மகிழ்பூத்திடும் அருணாசலா
அருணாசலா. (௨௧)

பாராளுமன் னவர்செல்வமும் பகரும்விசும் பிறைசெல்வ
முஞ், சீரானவே தன்செல்வமுந் திருமான்மகிழ் தருசெல்வ
முங், காராருமின் னெனவெண்ணியுன் கழல்போற்றுவார் தஞ்
செல்வமிங், காராலுமோர் வொண்ணாததாம் அருணாசலா
அருணாசலா. (௨௨)

---

* ஆரணன் - பிரமன்.

உனக்குண்மறைந் திங்காளுநா னுறல்போலென தருளா லினி, யெனக்குண்மறைந் திருமைந்தனே யென்றாய்க்குரு வாய் வந்துநீ, நினைக்குந்தொறு நினைக்குந்தொறு நீயன்றியொன் றுங்காண்கிலன், அனக்குண்டமோர் * பூதக்கருள் அருணா சலா அருணாசலா. (௨௩)

காவிக்குநேர் விழிமாதரார் காமக்கட லதின்மூழ்கிய
பாவிக்குநின் னிருதாட்புணை பாலித்திடா யெனிலுய்வனோ
நாவிக்கருள் செயுமையனே ஞானத்தவர் புகழ்தூயனே
ஆவிக்குறு துணைமெய்யனே அருணாசலா அருணாசலா. (௨௪)

ஒன்றாகினை பலவாகினை யுளதாகினை யிலதாகினை
யென்றாரண மதுகூறுவ தெண்ணாதுதாம் பரமென்றிடுங்
கன்றால்விள வெறிமாயவன் கமலத்தயன் வெருவுற்றிட
அன்றாழல் வரையாகினை அருணாசலா அருணாசலா. (௨௫)

வளர்கார்த்திகை மாதந்தொறும் வருகார்த்திகை நாடன்னிலே
பளகானதில் லாவன்பர்கள் பரிவாகவே யேத்தித்தொழக்
கிளர்மாமலை தனிலேயொளி கெழுசோதிகாட் டாநின்றநின்
அளவார்தெரி பவரையனே அருணாசலா அருணாசலா. (௨௬)

ஒருபான்மல ரயனாகவு மொருபாறிரு மாலாகவும்
பொருவாவருட் டிருமேனியாய்ப் பொலிவாயிதன் றியுமாமலை
வருபாவையோர் பாலாகவும் வருவாயிதன் றியுமையனே
யருவாவையுன் னருளென்னையோ அருணாசலா அருணாசலா.

---

* பூதக்கு - பூதத்துக்கு.

ஒப்பானதி லொருமூர்த்தியா யொருபாதமார் திரிமூர்த்தியாம்
அப்பான்மைபோன் மலையாகியு மருளின்பெரு மையினையனே
இப்பாருளோர் கண்டேதொழ விருந்தாய்நதி மதியாடா
*வப்பார்சடை முடியண்ணலே அருணாசலா அருணாசலா. ()

இருப்பானது வெளிமாலை யிடத்தோர்மா கதமாமலை
மருப்பார்மத மலைபெற்றது வளைவில்லொரு பொன்மாமலை
விருப்பாமித ஞாலோவொளி மேவும்மலை வடிவாயினை
யருப்பாரெருக் கணிமாலையாய் அருணாசலா அருணாசலா.(௨௯)

பொறியின்வழி மனம்போக்கிடார் பொன்னந்திரு வடிசேர்வதுஞ், செறியும்மிரு வினையாளர்க டிகழும்பிற வியிலாழ்வதும், வெறிகொண்மரை பரிதிக்கெதிர் விகசித்துவா டுதல்போலுமென், றறியுந்நிலை யெற்கீந்தருள் அருணாசலா அருணாசலா. (௩௦)

படியாவுமோர் குடைநீழலிற் பரிக்கும்மவர் மகிழ்செல்வமுங், கடியார்தரு நிழல்வைகுறுங் † கண்ணாபிரன் மகிழ்செல்வமு, நெடியோன்மகிழ் தருசெல்வமு நின்னன்பர்தாள் பணிந்தேத்திடும், அடியாரடிப் பொடிநேருமோ அருணாசலா அருணாசலா. (௩௧)

காட்டுக்குளே தவஞ்செய்குவார் கனவின்னடுத் தவஞ்செய்குவார், தேட்டுற்றநற் கதிகாணவென் செபலிங்கிதுன் கோயிற்குளே, வேட்டுற்றல கிட்டேதிரு மெழுகிட்டிலார் கதி

---

* அப்பு - கங்கை. † கண்ணாபிரன் - இந்திரன்.

காண்பரோ, ஆட்டுக்குமன் றினினின்றிடும் அருணாசலா அரு
ணாசலா. (௧௨)

பிறவாநெறி தருவானுநீ பிறக்கும்படி செய்வானுநீ
யிறவாவரந் தருவானுநீ யிறக்கும்படி செய்வானுநீ
மறவாதுனை வாழ்த்தும்படி வந்தாளவும் வேண்டுமையா
* அறவாணர்வாழ்த் தொலிமேவிய அருணாசலா அருணாசலா.()

உன்றாண்மலர் முடியாகவே யுறுமன்பர்கூற் றுவர்பெற்றபே
றென்றேனுமா லயன்வானுளோ ருறுகின்றில ரெனிலாங்கவர்
கன்றார்களோ விதுநன்றுகொல் கருணாகரா மதிசேகரா
அன்றாலமுண் டருள்செய்திடும் அருணாசலா அருணாசலா.(௧௪)

மானேந்தினை மழுவேந்தினை மதியேந்தினை நதியேந்தினை
கானேந்திலா வெருக்கேந்தினை கமலன்முடி காத்தேந்தினை
வானேந்தினு ரெலும்பேந்தினை வறியேன்மொழி யையுமேந்தி
ஆனேந்தவே வந்தாளுவாய் அருணாசலா அருணாசலா. [௧௫

திருமாலொரு கண்வாங்கியுன் செஞ்சேவடி மிசைசாத்தினன்
கருமாவடர் கண்ணப்பருங் கண்ணுக்கொரு கண்சாத்தினர்
பெருமானிவர்களில்யாவரேபெரியோரெனச் சிலரெண்ணுவார்
அருமாதவர் மெய்யோர்குவார் அருணாசலா அருணாசலா.(௧௬)

பூமாந்திரேன் முதலோர்தமைப் பொன்றச்செய்வை யெனவோர்ந்துமே, காமாந்தக னுவாயெனுங் கருத்தேபெரி தாக்கொண்டுவீ, ணேமாந்தர்கள் புகழ்வாரிது வெறியோமிகு

---

* அறவாணர் - தருமத்தினால் வாழ்வோர்.

மஞ்ஞானமோ, ஆமாம்பிணை திரிசாரஞ்சூழ் அருணாசலா அரு
ணாசலா. (௩௭)

கல்லானைமுன் கைநீட்டியே கரும்புண்ணுமா றருள்செய்நீ
பொல்லாதகன் மனமுன்னருட் போதந்தனை யண்ணச்செய
வல்லாயலை போனிற்பதென்மாயஞ்சொலாய்மகிழ்தொண்டர்கள்
அல்லாதவர்க் கரிதாகிய அருணாசலா அருணாசலா. (௩௮)

வாட்டேறுகண் ணிசைஞானியார் மைந்தன்றனை யாட்கொண்டநாள், பாட்டேயருச் சனையாமெனப் பகர்ந்தாயஃதுணர்ந்தும்பிறர், மாட்டேகவி சொலவெண்ணுமென் மருணீக்குவா யிருவோர்கள்போ, ராட்டேசெய வவர்முன்வரும் அருணாசலா அருணாசலா. (௩௯)

ஈனந்தரு பிறவிக்கட லிடையேழையேன் பலகால்விழ
வூனந்தரும் வினையாம்வளி யுறுவித்தலா லுனதின்னருள்
மோனந்தரு குகைசேரவே முன்னிக்கொடு வந்தேனையா
ஆனந்தமா டியவையனே அருணாசலா அருணாசலா. (௪0)

நாய்தன்னிலுங் கடையாகிநின் னல்லன்பர்தம் பானண்ணிலேன், வாய்தன்னினின் றனைவாழ்த்திலேன் வணங்கிப்பணிசெய்தும்மிலன், பேய்தன்னொடா டியவாறுபோற் பித்தேறுமென் னகநண்ணினை, ஆய்தன்னினு மருள்செய்திடும் அருணாசலா அருணாசலா. (௪௧)

சந்தித்துமா லயன்வாதுசெய் தவிருங்கவர்க் கரிதாகினை
வந்தித்தலா லொருபாணன்முன் வந்தாய்விறகோதிக்கொடு

சிந்தித்திடி லவரித்திறந் தெளிவெய்தியின் னருள்சேர்குவார்
அந்திப்பிறை முடியாளனே அருணாசலா அருணாசலா. (சஉ)

உமையாளரு ளனையாகவு மொருதந்தைநீ நானாகவுந்
தமருன்னடி யாராகவுஞ் சார்பற்றவர் தமைநோக்குறி
னமனார்நணு காதோடுத னேயனுணர்ந் துனையண்டினேன்
அமர்நீதிபார் தொழுமையனே அருணாசலா அருணாசலா. ()

கார்மேவிய களங்கண்டனன் கழன்மேவுமால் விழிகண்டனன்
போர்மேவுரு லங்கண்டனன் போதன்றலைக் கரங்கண்டனன்
சீர்மேவுமா திடங்கண்டனன் சிறியேனிட ரினிக்காண்பனோ
ஆர்மேவுதா ரணிதோளனே அருணாசலா அருணாசலா. (சச)

திருமாலய னனதாண்முடி தெரிவானல மந்தார்முனம்
ஒருமாதுவந் தியின்வாய்தலி னுறுமாறறி கிலாகிநல்
அருமாறிய திறனென்னையோ வுமைபாகனே யருளாகனே
அருமாதவர் பலரேத்திடும் அருணாசலா அருணாசலா. (சரு)

வெல்லாளமன் னவன்வாழவோர் மகவாயவற் கருளீந்திடும்
* வில்லார்மதி முடியண்ணலே வினையேன்பிறந் திடவைப்பை
கல்லாய்மர மாயேனுநீ கனிவோடபர் தருமிப்பதி [யேல்
யல்லாவிடந் தனில்வைத்திடேல் அருணாசலா அருணாசலா. ()

வரமாமல ரவனீந்திட வானோர்களுக் கிடரேசெயு
நரகாசுரன் றனைவெல்லமுன் னாரயணன் றவஞ்செய்தலின்
ஒருபாதியாங் கவனுக்களித் தொருபாதிதே விக்கீதலால்
அருவாய்மரு வினையோசொலாய் அருணாசலா அருணாசலா. ()

* வில் - பிரகாசம்.

எள்ளுக்குளெண் ணெய்போலவு மெறிமாமணி யொளி போலவுங், கள்ளுற்றபூ மணம்போலவுங் கனகத்துறு மொளி போலவும், விள்ளுற்றிடா துயிர்தோறுநீ மேவுற்றதோர்ந் தவர்ப்போற்றுவேன், அள்ளுற்றநீ றணிமெய்யனே அருணா சலா அருணாசலா. (௪௮)

உமையாளுன விழிமூடுநா ளொளிருங்கதிர் மதிவானிடை
சமைவாயிருக் கவுநள்ளிரு டரணிக்குண்மூ டியதன்மையாற்
கமையாருநின் விழிகாரணக் கதிர்மாமதி யெனவோர்ந்தனன்
அமைவாமனத் தவர்போற்றிய அருணாசலா அருணாசலா. ()

பெருமைக்கட னிறவண்ணனும் பிரமன்முத லியதேவரும்
ஒருமிக்கமாய் தருமூழிதோ றொருதானுமாய் தானீங்கவே
தருமக்கட வுள்வெள்ளிடை தாளுப்பவா வுவந்தூர்ந்திடும்
அருமைத்திரு வருளாளனே அருணாசலா அருணாசலா. (௫௦)

கலையார்மதி கதிராகுநின் கண்ணோரிரண் டையுமூடு நாண், மலையான்மகள் கழுவாய்செயும் வகைசொல்லியே வினை நின்னரு, ணிலையீதெனி னெவருய்ந்திடார் நிமிர்செஞ்சடை மிசையேமதி, அலையார்நதி யொடுசூடிய அருணாசலா அருணா சலா. (௫௧)

தக்கன்முனிந் தேகூறிய சாபந்தொடர்ந் தெய்தாதுனைப்
புக்கண்முசந் திரனோர்கலை பொலிவெய்தவுன் முடிமீதிலே
வைக்கும்படி யச்சந்திரன் மனநைந்துசெய் தவமென்னையோ
* அக்கன்புட னணிமெய்யனே அருணாசலா அருணாசலா. ()

---

* அக்கு - சங்குமணி.

உன்னன்னிலை வினவும்பொழு துமைதன்னையே வியந்தா ளென, மன்னும்பழு னையிற்சங்கமாய் மருவிச்சிறு விதிமா மக, வென்னப்பொலி கென்றேவிய தெவர்க்கும்மரு டாவல் லவோ, அன்னத்தவன் பணியையனே அருணாசலா அருணா சலா. (௫௩)

விண்ணாளுமிந் திரனக்கினி * விறலந்தக னிருதர்க்கிறை
தண்ணார்வரு ணன்வாயுவே தனதன்னுட னீசானனும்
உண்ணாடிமூழ் கியதீர்த்தமின் றென்றேயெம திடர்தீர்த்திட
அண்ணாமலை யெனநீடிய அருணாசலா அருணாசலா. (௫௪)

பூசிக்கநன் மலருண்டுதீம் புனலுண்டுநன் னெறிதேர்குவான்
வாசிக்கவா கமமுண்டுநின் மலர்நோக்கமு முண்டாகுமே
னேசித்தெளி யேனுய்குவே னீறோடுகண் மணிபூண்டுளத்
†தாசற்றவர் தொழுமையனே அருணாசலா அருணாசலா. (௫௫)

திருவாசக மொன்றுண்டுநற் றேவாரமு முண்டாங்கவை
கருவாய்வழி வாராநெறி காட்டும்மெனச் சான்றோர்சொலத்
தெருளாதுவீ ணேபைபவோ தெருநாயினுங் கடையாயினேன்
அருமாதவர் துதியோவிலா அருணாசலா அருணாசலா. (௫௬)

பல்லார்விடப் பணியாமுன்னைப் பரிந்தேதொழ வருளீந் ததும், பொல்லாவிட முண்டண்டரைப் புரந்தாள்வது மோர்ந் தும்முனைக், கல்லார்களைச் சேராநெறி கடையேற்கருள் செய வேண்டுமால்; அல்லார்சுட லையிலாடிய அருணாசலா அருணா சலா. (௫௭)

---

* விறல் - வெற்றி. † ஆசு - குற்றம்.

தேவாதிதே வாவென்கிலேன் சிவலோகநா தாவென்கிலேன்
காவாயரனேயென்கிலேன் காபாலிவந் தாளென்கிலேன்
சேவானதூர் வோயென்கிலேன் சிறியேனத னாலோவையா
ஆவாவென வருள்செய்கிலை அருணாசலா அருணாசலா. (௫௮)

கன்னாதுபே ராவிந்திரா காமாமுக சோமாபுவி
மன்னாவென வேபொய்பரை வாழ்த்திக்கவி சொல்லாமனன்
குன்னாருள் பெருமன்பர்தா ளுளம்வைத்துவாழ்த் துறநல்கு
அந்நாவலூ ராளிக்கருள் அருணாசலா அருணாசலா. [வாய்

பச்சென்னிற மொருபாலுறப் பைம்பொன்னிற மொருபாலுற
வெச்சென்றதீ நிறமேவிமேல் வெண்ணீறுபூத் திடநின்றநீ
நச்சுண்டிருண் டிடுகண்டமு நணுவுற்றதைம் பூதங்களுக்
கச்சென்னநிற் பதுகாட்டவோ அருணாசலா அருணாசலா. (௬0)

பன்னாகணைத் துயின்மாயனே பரிவோடுகாத் தருள்செய்குவ
னென்னாச்சில ரெடுத்தோதுவ ரீதுண்மையே யிமையோர்வரை
தன்னாற்கடைந் திடவந்தநஞ் சங்கண்டவ ரஞ்சித்தொழும்
அந்நாள்புர வாவண்ணமென் அருணாசலா அருணாசலா. (௬௧)

காமத்தொடு கொலைசூதுபொய் களவுக்கிடந் தந்தென்மனம்
பூமத்தமென் பணிசென்றநீ பொருந்தற்கிடந் தாராமையால்
ஈமத்தெரி நரகம்மெனக் கிடமாகுமென் றெணிநின்னரு
ளாமெய்த்துணை யேநம்பினேன் அருணாசலா அருணாசலா. ()

உனக்குள்ளடி பேணமேவிய முனையோர்கிளை மைப்பினிவ்
வுடல், எனக்கென்னவீந் தனைமுன்னிருளென்றேடுசேர்ந் தந்

தோவெனை, நினக்குட் புறம் பாய்நிற்கவே நீடுற்றதா லென்செய் குவேன், அளக்கன்னிநேர் தருமாதர்சூழ் அருணசலா அருண சலா. (௬௩)

பாசக்கிடம் * பசுவென்னவும் பசுவுக்கிடம் பதியென்னவு
மாசற்றமா மறைபேசுமம் மாயைப்பசு வாமென்னுமே
தேசிற்பொலி பதியாகுநீ திகழ்கின்றதற் புதமல்லவோ
ஆசைக்குமே னிமிர்சோதியே அருணசலா அருணசலா. (௬௪)

யான்செய்தனன் பிறர்செய்தனரெனதியா னெனுமஞ்ஞானமே
யூன்செய்பிற வினைநல்குமென் றுணர்ந்தேனின தருளாலினி
வான்செய்பத விகள்யாவினு மயங்காநெறி தந்தாளுவாய்
ஆன்செய்நெடுங் கொடியாளனே அருணசலா அருணசலா. ()

வெய்யோனுத யஞ்செய்திடில் விரவும்மிரு ளொழிவா தல்போற், பொய்யானதில் குருவந்திடப் பொய்ப்போதநீங் கிடுமென்னவே, மெய்யானநூ லுரைசெய்யவும் வீணேதிரிந் துழல்வார்சிலர், ஐயாவவ ருய்வார்கொலோ அருணசலா அரு ணசலா. (௬௬)

பரையுன்னிரு விழிமூடுகைப் பசுமத்தனி விரற்பத்திலும்
வருகங்கைபத் தினின்மூன்றயன் மாலிந்திர னுக்கீந்துமற்
றெருநான்குமூன் றையும்வேணியி லொளித்துப்புவ னங்காத்
அருமைச்செய லறிவாரெவர் அருணசலா அருணசலா. [தநின்

மடவார்மய ருனோர்புறம் வருகின்றபல் பிணியோர்புறந்
திடமாம்வறு மையுமோர்புறந் தீராதீப் பசியோர்புறம்

* பசு = சீவன்.

கடனாகும்வன் பேயோர்புறங் கழிமானமாங் குரங்கோர்புறம்
அடலான்மெலிந் துணையண்டினேன் அருணாசலா அருணாசலா.

தாய்மார்களுஞ் சலித்தார்வரு சமனாருமோ சலித்தார் மலர், வாய்வேதனுஞ் சலித்தானழன் மலிகும்பியுஞ் சலித்திட்டதாற், சேய்நானினிச் செயும்வண்ணமென் செப்பாய்பல கலைவேதமும், ஆய்மேலவர் தொழுமையனே அருணாசலா அருணாசலா. (௬௬)

மனையாண்மனம் வெறுப்பாகவு மாதாமனம் வெறுப்பாகவுங்
கனிவானபெண் கள்பிள்ளைகள் கசந்தேமனம் வெறுப்பாகவுஞ்
சனியாமிரு மனுமீழையுஞ் சார்ந்தேழையே னலியாவகை
அனையாமென வந்தாளுவாய் அருணாசலா அருணாசலா. (௭0)

காட்டுக்குளே தவஞ்செய்குவார் கனலுக்குளே தவஞ் செய்குவார், நாட்டுக்குளே யறஞ்செய்குவார் நதியாவினும் போய்மூழ்குவார், பாட்டுக்குநால் வர்களெய்திய பரிசிற்பய னடைவார்களோ, ஆட்டிற்பொலி தீக்கண்ணனே அருணாசலா அருணாசலா. (௭௧)

* பறவைக்கரசானைந்தவெம் பணிவந்துபோற் றப்பூண் டநீ, மறமுற்றுமா தவரேவிட வருபாம்பணிந் திடவில்லையோ, திறமுற்றுவன் பிலனென்றெனைச் செயிர்த்தாட்கொளா வகை யென்னைமுன், அறவர்க்கரு டருமையனே அருணாசலா அருணாசலா. (௭௨)

---

* பறவைக்கரசு - கருடன்.

எரிகின்றதீப் போற்சீறியே யியமன்வரு மேற்பேதை யேன், பரிகின்றமார்க் கண்டேயர்போற் பணிந்துன்பதம் போற்றுந்திறந், தெரிகின்றிலே னதனுவினே சிறியேனை யாண் டருள்வெட்பலி, யரிகின்றசென் னியிலேற்றிடும் அருணா சலா அருணாசலா. (௭௩)

தம்மாலறி வனயாவையுந் தாமல்லவென் பதுமைந்தனே
சும்மாவிருந் திடுமாறெனச் சொல்லித்தெரி விப்பான்மலர்க்
கைம்மான்முத லியயாவையுங் கரந்தோர்குரு வாய்வந்தனை
அம்மாவுன தருளென்னையோ அருணாசலா அருணாசலா. (௭௪)

காலாழ்களர் படுமாயின்வெங் கரிதன்னையு நரிகொல்வது போலாசையாம் படுசேற்றினிற் புலையேன்விழுந் துழல்கின்ற தாற், பாலாமிரு வினைவெல்லுநின் பதமெங்ஙனந் தொழுவே னையா, ஆலாலமுண் டருணாதனே அருணாசலா அருணாசலா. ()

பொருளீட்டவு மதனைவப் பொத்தற்சடந் தனையோம்பவு
மருளீட்டுமா தர்களாசையின் மயங்கித்திரி தரவங்கொலோ
தெருளீட்டுமித் தனுவீந்தனை தேவாதிதே வாவென்னையே
அருளீட்டுமன் பர்கள்போற்றிய அருணாசலா அருணாசலா. ()

பொய்யானதே குடிகொண்டது புழுவானதோ நெளி கின்றது, சையோகமே விழைகின்றது சவமாகிமேல் விழுகின் றது, மெய்யானதிங் கிதைநாயினேன் வீணேசுமந் துழல்கின் றிலேன், ஐயாவுன தருள்வேண்டினேன் அருணாசலா அருணா சலா. (௭௭)

இந்நாள்வரை யிலுமுண்டசோ றெல்லாமன் விடவெண்
ணிலோ, பொன்னுமலை தானேருமோ புலையேனின முணவே
பெரி, தென்னுவழல் வேனுதலா லியமன்வர வேயுன்னுவான்
அந்நாளின்மு னீவந்தருள் அருணாசலா அருணாசலா. (எஅ)

பறக்குஞ்சிறை மறையன்னமும் படிகீண்டகோட் டொரு
பன்றியுங், கறக்கின்றவான் பாலாட்டியே கனிவாயருச்சித்தீன்
றவன், இறக்கும்படி செயுமன்பர்தா மெய்தும்பய னுணரார்
கொலோ, அறக்குஞ்சியஞ் சடையாளனே அருணாசலா அரு
ணாசலா. (எகூ)

தாய்தந்தைநீ குருதெய்வநீ தமியேனுயி ரதுநீயெனு
வாய்தந்தனமொழிவேனலான் மனமாண்டநின்னடியாரொடுந்
தோய்தந்துவல் வினைநீங்கவுந் துலையொத்தநன் னிலைகூடவும்
ஆய்தந்திலே னுய்வேன்கொலோ அருணாசலா அருணாசலா. ()

மார்த்தாண்டனின் மலையுச்சிமேன் மதியாதுநா டொறு
மேகுதல், பார்த்தாங்கவன் வெருவும்படி பணித்தோர்புறஞ்
செலவைத்தநீ, வேர்த்தாவென வுனைமேவுமென் வினையோர்
புறஞ் செலவைத்திலை, ஆர்த்தார்முடிக் கணியண்ணலே அரு
ணாசலா அருணாசலா. (அக)

தெள்ளித்தெளி தருமன்பர்பாற் சேர்ந்தேயரு ளீவாய்
படர், முள்ளிக்குவே லிகள்போடுதன் முறையல்லவென் பது
போலெனை, யெள்ளித்திரு வருளீந்திலை யெனினேழையே
னென்செய்குவேன், அள்ளிப்புனன் முடிமேற்கொளும் அரு
ணாசலா அருணாசலா. (அஉ)

தேன்பட்டசொல் லியராசையிற் றிகழாலவாய்க் கரும்
பென்னவே, நான்பட்டுநொந் தனன்மேலுமோ நமனார்வரி
லென்செய்குவேன், கான்பட்டபூங் குழல்பாகநின் கழல்சூடி
யாட் கொளவேண்டுமால், ஆன்பட்டநீள் கொடியண்ணலே
அருணாசலா அருணாசலா. (௮௩)

பதியாகுநின் பதமாமலர் பணியாதபே யருநின்புகழ்
துதியாதமூ டருமாலயஞ் சூழ்வந்திடாப் புலையாளரும்
கதியாதுகா ணுவரையையோ காலன்கதை யடிபட்டுநைந்
ததியாகுல மடைவாரலால் அருணாசலா அருணாசலா. (௮௪)

மாயோனையுந் தொழுகின்றிலன் மலரோனையுந் தொழுகின்றில
னாயேனினை யேபோற்றுவே னல்காயரு ளெனிலாங்கவர்
ஏயேயென நகைசெய்வரே யெனநாணிநான் மெலிகின்றனன்
ஆயேயென வடியார்க்கருள் அருணாசலா அருணாசலா. (௮௫)

* பொருப்புச்சிலை யாயுன்னருட் போதந்தலைப் படுமன்பர்க
ணெருப்புக்கும்வா யவினுக்குநீ ணீருக்குமஞ் சார்மேலுமோ
மருப்புக்கடா மறலிக்குமே மனமாய்வுறு ரெனவோர்ந்துநின்
அருட்புக்குவான் விழைகின்றனன் அருணாசலா அருணாசலா.()

வாசிப்பதுன் னடியார்புகழ் வந்திப்பதுன னடியார்பத
நேசிப்பதுன் னடியார்பத நினைகிற்பதுன் னடியார்பதம்
பூசிப்பதுன் னடியார்பதம் புனைகிற்பதுன் னடியார்பதம்
ஆசிப்பதுன் னடியார்பதம் அருணாசலா அருணாசலா. (௮௭)

---

* பொருப்பு - மலை.

பொன்னுக்குளே யொளியென்னவும் பூவுக்குளே மணமென்னவும், என்னுக்குளே நீமேவுவ தெளியேனுணர் தருமாறுசெய், நுன்னுக்குளே யான்மேவவு மொருநீயருள் செயவேண்டுமால், அன்னக்கொடி யோன்போற்றிடும் அருணாசலா அருணாசலா. (௮௮)

வேலிக்குமுள் ளிடவெண்ணிலார் வெறிகொண்டபேயர்களாகியோர், காலுக்குமுள் ளிடல்போலுனைக் கடையேன்மறந்திதுகாறுமே, மாலுற்றமெய் யதுபோற்றியுன் மலர்த்தாடொழுமாறோர்ந்திலன், * ஆலிக்குமுள் ளத்தோர்க்கருள் அருணாசலா அருணாசலா. (௮௯)

† நட்டுத்தொழா தவனென்றரு ணல்காயிஃ தோர்வாரெனிற றொட்டுக்கலா லெறிந்தோற்குமுன் றொலைபாதவின் பந்தந்தது கட்டுக்கதை யென்றேசிலர் கழறிக்கொள்வா ரேயம்மொழி யட்டிச்சுடு மென்காதினை அருணாசலா அருணாசலா. (௯௦)

கையாற்பெறு பயனின்மலர்க் கழலர்ச்சனை யதுசெய்தலே
மெய்யாற்பெறு பயன்மெய்யனீ மேவாலய மதுசூழ்தலே
பொய்யானதில் வாயாற்பயன் போற்றித்துதி செயலிங்கிவை
ஐயாவெளி யேற்கெய்துமோ அருணாசலா அருணாசலா. (௯௧)

மலமூன்றுடை யாருக்கருள் வடிவங்கொடு வந்தாங்கவர்
சலமூன்றிரு வினையொப்பிலே தருபோதுவா தனைநீங்கியே
நலமூன்றுற வருள்செய்புநீ நாயேற்கருள் செய்வாய்கொலோ
அலமூன்றுதோ ளவனேடிய அருணாசலா அருணாசலா. (௯௨)

---

* ஆலித்தல் - களித்தல். † நட்டு - நேசித்து.

பாசாடவிக் குள்ளைம்புலப் பகைவேடருக் குறவாதலாற்
காசாசையான கொண்டற்பார்தங் கடைவாயிறே றுங்காத்திது
பூசாபல னேவென்றுளே புலம்பித்திரிந் துழல்கின்றிலேன்
ஆசாரமா ருதார்க்கருள் அருணாசலா அருணாசலா. (௬௩)

புலையானதோர் தொழில்செய்யினும் பொய்யானதோர் மொழிபேசினுங், கொலையாகிய செயல்செய்யினுங் கொடிதாங் கள வதுசெய்யினு, மலையா துநின் னருள்சேர்வரேல் வறியே னவ ரடிசேர்வனால், அலையாருகு டியவண்ணலே அருணாசலா அருணாசலா. (௬௪)

படைப்பானுநீ யுலகியாவையும் பரிவாயளித் திடுவா னுநீ, துடைப்பானுநீ பொய்பொய்யெனத் தோற்றுவகை மறைப்பானுநீ, கடைப்பாலனுக் கிரகஞ்செயுங் கண்ணாளனுநீயாய யன், அடைப்பாற்றுயில் வோனாபதேன் அருணாசலா அருணாசலா. (௬௫)

பாடார்கவி பரியாருனைப் பனிமாமலர் கொடுபூசியார்
தேடாரடி யார்தம்மையுக் தினமுண்டதே யுண்டைபையோ
மாடாமெனத் திரிவாரவர் மனம்வெந்துகும் பியில்வீழ்வரே
ஆடாதபே யுடனாடிய அருணாசலா அருணாசலா. (௬௬)

போகாதுவா யுவையுள்ளுளே பூரித்துநே ரிற்போக்கியே
சாகாமனத் தவராகிநின் சார்புற்றிட வேயெண்ணுதல்
சேகார்தரு பலவேணிகள் செறித்தாங்கதன் மேலேறியே
ஆகாயமெட் டிடல்போலுமால் அருணாசலா அருணாசலா. (௬௭)

மாலாரொரு கற்பந்தனின் மழைமேகமாய் வரவாங்கதன்
மேலாயினை பின்னும்மொரு விடையாய்வர வேழூர்ந்தனை
பாலார்மொழி மாதாய்வரப் பரிவாவிடப் பாலீந்தனை
ஆலாலமுண் ணும்பித்தனீ அருணசலா அருணசலா. (கூஅ)

பாய்வானதி நீர்ப்பாய்ச்சினும் படரெட்டியின் கனிகைப்பறு
நாய்வானிமி ராதாற்பல நாண்கொண்டிறுக் கிக்கட்டினு
மாய்வாகிவன் மனநேருறு வகையாங்கவை போலாதலோர்ந்
தாய்வார்க்கரு ளுனையண்டினேன் அருணசலா அருணசலா.

கொம்பாரிடை வண்டார்விழிக் கொங்கார்தனச் சிங்காரிக
டம்பான்மனஞ் சென்றேயழி சண்டாளனை யென்றுள்ளவையோ
செம்பாகினேர் மொழிபங்கனே சிந்தித்தவர்க் குபர்வீடருள்
அம்பார்சடை நம்பாவொளிர் அருணசலா அருணசலா. (க00)

படியாளுமன் னவர்வாழவும் பரிவோடுமன் னுயிர்வாழவும்
முடியாமறை தான்வாழவும் முதலானசை வம்வாழவுங்
கடியாநெறித் தமிழ்வாழவுங் கவிவாணர்பா வரும்வாழவும்
அடியார்கள்வா ழவுநன்கருள் அருணசலா அருணசலா. (க0க)

## அருணசலசதகம்

முற்றிற்று.

சிவமயம்.

அருணாசல சதகத்தின்

# செய்யுள் முதற்குறிப் பகராதி.


| செய்யுள். | பக்கம். |
|---|---|
| **இ** | |
| இடியுங் | 4 |
| இந்நாள் | 17 |
| இருப் | 7 |
| **ஈ** | |
| ஈனந் | 9 |
| **உ** | |
| உமையாள | 10 |
| உமையாளு | 11 |
| உனக்குண் | 6 |
| உனக்குள் | 13 |
| உன்றுண் | 8 |
| உன்னன் | 12 |
| **ஊ** | |
| ஊனந் | 4 |
| **எ** | |
| எரிகின்ற | 16 |
| என்னுக் | 11 |
| **ஒ** | |
| ஒப்பான | 7 |
| ஒருபா | 6 |
| ஒன்று | 6 |
| **க** | |
| கடியார் | 1 |
| கலையார் | 11 |
| கல்லானை | 9 |
| கற்பம் | 2 |
| கன்னு | 13 |
| **கா** | |
| காட்டுக் | 7 |
| காட்டுக்கு | 15 |
| காமத் | 13 |
| கார்மே | 10 |
| காலாழ் | 16 |
| காவிக் | 6 |
| **கை** | |
| கையாற் | 19 |
| **கொ** | |
| கொம்பா | 21 |
| **ச** | |
| சந்தித் | 9 |
| **செ** | |
| செப்பிற் | 5 |
| **த** | |
| தக்கன் | 11 |
| தம்மா | 16 |
| **தா** | |
| தாய்தர் | 17 |
| தாய்மார் | 15 |
| **தி** | |
| திருநா | 1 |
| திருமாலய | 10 |
| திருமாலொ | 8 |
| திருவா | 12 |
| **தெ** | |
| தெள்ளித் | 17 |
| **தே** | |
| தேவாதி | 13 |
| தேன்பட் | 18 |
| **ந** | |
| நட்டுத் | 19 |
| **நா** | |
| நாய்தன் | 9 |
| **ப** | |
| பச்சென் | 13 |

| செய்யுள். | பக்கம். |
|---|---|
| படியாவு | 7 |
| படியாளு | 21 |
| படைக் | 3 |
| படைப் | 20 |
| பதியாகு | 18 |
| பரிந் | 3 |
| பரையு | 14 |
| பல்லார் | 12 |
| பறக்குஞ் | 17 |
| பறவைக் | 15 |
| பன்னு | 13 |
| **பா** | |
| பாசக் | 14 |
| பாசா | 20 |
| பாடார் | 20 |
| பாம்பின் | 5 |
| பாய்வா | 21 |
| பாரா | 5 |
| பாரின் | 4 |
| **பி** | |
| பிறவா | 8 |
| **பு** | |
| புலையான | 20 |
| புல்லாகி | 2 |
| **பூ** | |
| பூசிக்க | 12 |
| பூமாங் | 8 |
| **பெ** | |
| பெருமைக் | 11 |
| **பொ** | |
| பொய்யா | 16 |
| பொருப் | 18 |
| பொருளீட் | 16 |
| பொறி | 7 |
| பொன்ப | 1 |
| பொன்னுக் | 19 |
| **போ** | |
| போகாது | 20 |
| **ம** | |
| மடவார் | 14 |
| மட்டார் | 4 |
| மலமூன் | 19 |
| மனையாண் | 15 |
| **மா** | |
| மாயோனை | 18 |
| மார்த் | 17 |
| மாலா | 21 |
| மாறு | 4 |
| மானேக் | 8 |
| **மு** | |
| முடிபட் | 2 |
| முன்னு | 3 |
| **மே** | |
| மேனு | 4 |
| **மை** | |
| மையார் | 3 |
| **யா** | |
| யான்செ | 14 |
| **வ** | |
| வரமா | 10 |
| வல்லா | 10 |
| வளர் | 6 |
| **வா** | |
| வாசிப் | 18 |
| வாட்டிடறு | 9 |
| வாதா | 3 |
| வானு | 2 |
| **வி** | |
| விண்ணுளு | 12 |
| வில்லார் | 2 |
| **வீ** | |
| வீட்டுக் | 5 |
| **வெ** | |
| வெய்யோ | 14 |
| **வே** | |
| வேலிக் | 19 |


செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

ஸ்ரீ. ராமகிருஷ்ண பரமஹம்ச விஜயம்:—ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகளின் குருமூர்த்தியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் அற்புத சரித்திரமும், கதாமிர்தமும் [பரமஹம்சர் படத்துடன்] ... ... 1 4

ஸ்ரீ விவேகாநந்த விஜயம்:—விவேகாநந்த சுவாமிகளின் திவ்விய சரித்திரமும், அவர் செய்த அற்புதமான பிரசங்கத்திரட்டும் [சுவாமிகள் படத்துடன்] ... 1 4

ஸ்ரீ பகவத்கீதை:—ஸ்ரீமத் பொன்னம்பல சுவாமிகளியற்றிய கூடார்த்ததீபிகை என்னும் உரையுடன் 2 0

பிரபோத சந்திரோதய வசனம்:—அல்லது மெய்ஞ்ஞான விளக்கம் ... ... ... ... 1 0

பிரபுலிங்கலீலை வசனம்:—நூதனமாய் தமிழில் வசனப்படுத்தப்பட்ட அரிய நூல் ... ... 0 12

ஸ்ரீ சங்கர விஜயம்:—ஆதி சங்கராசாரிய சுவாமிகள் சரித்திரம் (ஆதி சங்கரர் படமும், சிருங்கேரி ஸ்ரீ சாரதாம்பாள் படமும் கூடியுள்ளது) ... ... 1 0

ஸ்ரீ பக்தலீலாம்ருத வசனம்:—(82 பக்தர்களின் சரித்திரம்) 3 0

கல்லாடம் மூலமும் உரையும் [புதிய பதிப்பு] ... 3 0

திருவெங்கைக்கோவை:—(சிவப்பிரகாசசுவாமிகளருளிய இவ்வரிய கோவைக்கு நூதனமாய் எழுதப்பட்ட பதவுரை, கருத்துரை விசேஷ உரைகளுடன் ... 2 8

இந்து பைபில் என்னும் ஆரியர் சத்திய வேதம்:—உபநிஷத்துக்கள் முதலியன (நூலாசிரியர் படத்துடன்) 1 12

மதவிருக்ஷம்:—(உலகத்திலுள்ள பெரிய மதங்களின் சரித்திரமும் வரலாறும்: (மூன்று பாகம் அடங்கியது) 1 12

திவ்விய தேச யாத்திரையின் சரித்திரம்:—(இந்தியாவிலுள்ள பல திவ்ய ஸ்தலங்களின் மகிமையும் விசேஷங்களும், அந்த ஸ்தலங்களுக்கு இந்நூலின் ஆசிரியர் யாத்திரை செய்த வரலாறும்) ... ... 2 0